**செம்பாக்கம் நகராட்சியில் 30.6.2021ம் நாள் புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி: திரு. பெர்பெற்றி டெரன்ஸ் லியோன்,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜூன் 2021 மாதத்தின் நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.821** பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் விவரப்படியாக பராமரிக்கப்படும் தெருவிளக்குகளை பராமரிப்பு பணி செய்ய தெருவிளக்கு பணியாளர்கள் இல்லாததால் இந்நகர மன்ற தீர்மானம் எண்.651 நாள் 30.4.2020 பேரில், இவ்வலுவலக கடிதத்தில் தனியார் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி செய்ய அனுமதி கோரப்பட்டது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.148/2019/பி1 நாள் 18.5.2020 பரிந்துரையின் பேரில், நகராட்சி நிர்வாக ஆணையரக, தலைமை பொறியாளரின் கடிதம் ந.க.எண்.5878/2020/டிஒ1, நாள் 5.8.2020ல் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மூலம் (இயக்குதலும், பராமரித்தலும்) பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வருடம் | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | முதலாம் ஆண்டு 2020–2021 | 85.66 |
| 2 | இரண்டாம் ஆண்டு 2021–2022 | 89.94 |
| 3 | மூன்றாம் ஆண்டு 2022–2023 | 94.44 |

அதன் அடிப்படையில் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, மெஸ்ஸர்ஸ் சிம்லா கூல் மேக்கர்ஸ் எனும் நிறுவனத்திற்கு (1.10.2020 முதல் 30.9.2021 வரை) ஒரு வருட காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 30.9.2021ம் தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி நிறுவனம் முதலாம் ஆண்டில் வழங்கப்பட்ட பராமரிப்பு கட்டணத்தில் கூடுதலாக 5 சதவீதம் உயர்த்தி வழங்கி இரண்டாம் ஆண்டிற்கான பணி செய்ய சம்மதம் தெரிவித்து 25.6.2021ம் தேதியில் விண்ணப்பித்துள்ளார். மேலும், ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரரின் பணிதிறன் திருப்திகரமாக உள்ளதால், அதே ஒப்பந்தாரர் மூலம் இரண்டாம் ஆண்டிற்கு 1.10.2021 முதல் 30.9.2022 வரை பணி மேற்கொள்வதற்கு கால நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Item Description | No. of Lights |
|---|---|---|
| 1 | 40W Tuble Lights | 694 |
| 2 | 85 W CFL | 1404 |
| 3 | 27 W CFL | 61 |

| | | |
|---|---|---|
| 4 | 150 W SV Lamps | 115 |
| 5 | 250 W SV Lamps | 1215 |
| 6 | 2x36W TS Energy Saver Lights | 125 |
| 7 | 4x24W TS Energy Saver Lights | 235 |
| 8 | LED 50w | 102 |
| 9 | LED 36w | 96 |
| 10 | LED 18w | 240 |
| 11 | 250 W MHL | 148 |
| 12 | 400 W MHL | 162 |
| 13 | 150 W MHL | 23 |
| | Total | 4620 |

அலுவலக குறிப்பு:

1. தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மூலம் மேற்கொள்ள மேற்படி நிறுவனம் முதலாம் ஆண்டில் வழங்கப்பட்ட பராமரிப்பு கட்டணத்தில் கூடுதலாக 5 சதவீதம் உயர்த்தி வழங்கி, இரண்டாம் ஆண்டிற்கான பணி செய்ய சம்மதம் தெரிவித்துத்துள்ளதை தொடர்ந்து, இரண்டாம் ஆண்டு கால நீட்டிப்பிற்காக, நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற பிரேரணையினை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தெருவிளக்கு பராமரிப்பு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.822 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் எண்.3

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.20452/2020/எல்எ3 நாள் 10.11.2020ல் 15வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020–21க்கு முதல் தவணையாக இந்நகராட்சிக்கு ரூ.6457077/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றறிக்கை ந.க.எண்.20452/2020/எல்எ3 நாள் 17.11.2020ல் ஒதுக்கீடு தொகையினை செலவு செய்ய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.20452/2020/எல்எ3 நாள் 31.03.2021ல் 15வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020–21க்கு 2வது தவணையாக இந்நகராட்சிக்கு ரூ.6456561/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.12913638/– ஆகும்.

அதன் அடிப்படையில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| | குடிநீர் பணிகள் | |
| 1 | வார்டு எண்.5 சங்கோதியம்மன் கோயில் தெரு மற்றும் துர்கா காலனி 1வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி | 7.00 |
| 2 | வார்டு எண்.7 கௌசிக் அவென்யு, ஷா அவென்யு மற்றும் வார்டு எண்.15 காமராஜபுரம் மெயின் ரோடு - இம்மானுவேல் தெரு புதிய | 10.00 |

| | | |
|---|---|---|
| | ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி | |
| 3 | வார்டு எண்.7 சுந்தர் அவென்யு, சரவணா நகர் 7வது தெரு மற்றும் வார்டு எண்.12 பாரதிதாசன் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி | 10.00 |
| 4 | வார்டு எண்.13 வீரமாமுனிவர் தெரு, ரங்கா காலனி மெயின் ரோடு மற்றும் ஸ்டேட் பாங்க் காலனி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி | 10.00 |
| 5 | வார்டு எண்.1 திருமலை நகர் 1வது, 2வது மெயின் ரோடு, திருமலை நகர் 1வது , 2வது, 3வது, 3வது குறுக்கு தெரு, 4வது, 5வது, 6வது மற்றும் 7வது தெருவில் பிவிசி பகிர்மான குழாய்கள் பதித்தல் பணி | 10.00 |
| 6 | வார்டு எண்.1 திருமலை நகர் 3வது மெயின் ரோடு, திருமலை நகர் 8வது, 9வது, 10வது, 10வது குறுக்கு, 11வது, 12வது 13வது, 13வது விரிவ, 14வது, 15வது 16வது தெரு, விஜயக்குமார் அவென்யு மற்றும் ஏர்போர்ட் காலனியில் பிவிசி பகிர்மான குழாய்கள் பதித்தல் பணி | 10.00 |
| 7 | வார்டு எண்.6 நகராட்சி அலுவலக வளாகத்தில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ் நிலைத்தொட்டி (Sump) கட்டுதல் பணி | 20.00 |
| 8 | வார்டு எண்.7 சரவணா நகர் பகுதியில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ் நிலைத்தொட்டி (Sump) கட்டுதல் பணி | 20.00 |
| 9 | வார்டு எண்.12 கணேஷ் நகர் பகுதியில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ் நிலைத்தொட்டி (Sump) கட்டுதல் பணி | 20.00 |
| | **திடக்கழிவு மேலாண்மை திட்டம்** | |
| 10 | ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனம் (Battery Operated Vehicle) 10 எண்ணிக்கைகள் சப்ளை செய்தல் பணி | 18.00 |
| | மொத்தம் | 135.00 |

அலுவலக குறிப்பு:

1. மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திட்ட ஒதுக்கீடு தொகை போக கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.823** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2021-22-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.5 ராஜபாண்டியன் அவென்யு விரிவு தார் சாலை அமைத்தல் பணி | 7.00 |
| 2 | அலுவலக கூடுதல் கட்டிடத்திற்கு முன்புறம் பேவர் பிளாக் அமைத்தல், தேவையான மின் விளக்கு, மின் விசிறி, குளிரூட்டும் | 9.80 |

| | | |
|---|---|---|
| | சாதனம் மற்றும் மேசை, நாற்காலி சப்ளை செய்து பொருத்தும் பணி | |
| 3 | வார்டு எண்.1 நக்கீரன் தெரு மழைநீர் வடிகால்வாய், பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் பவநந்தியார் 4வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 9.50 |
| 4 | வார்டு எண்.1 பவநந்தியார் குறுக்கு தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 9.90 |
| 5 | நகராட்சி பகுதியில் 145 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 9.80 |
| 6 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 12 எண்ணிக்கையிலான பூங்காக்களை காவல் பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி | 9.80 |

அலுவலக குறிப்பு :–

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.824 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.5

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள இந்நகர் மன்றம் தீர்மானம் எண். 715 நாள் 29.10.2020ல் ஒப்புதல் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த மெஸ்ஸர்ஸ். சேகர் அன்டு கோ நிறுவனதிற்கு 28.10.2020ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டு அந்நிறுவனம் மூலம் 1.11.2020 முதல் 31.01.2021 வரை மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து, இப்பணியின் அவசியம் கருதி (பணி உத்திரவு ந.க.எண்.287/2018/எச்1 நாள் 13.1.2021) ன் படி மூன்று மாத காலத்திற்கு (1.2.2021 முதல் 30.4.2021 வரை ஒப்பந்த காலம் நீட்டித்து பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தினை 1.5.2021 முதல் 31.5.2021 வரை ஒரு மாத காலத்திற்கு நீட்டித்து பணி மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து, கொரானா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு இப்பணியாளர்களின் பணி அவசியமாவதை தொடர்ந்து, இந்நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தினை 1.6.2021 முதல் 30.6.2021 வரை ஒரு மாத காலத்திற்கு நீட்டித்து பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் 30.6.2021ம் தேதியுடன் முடிவடைவதாலும், தற்போதைய கொரானா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு இப்பணியாளர்களின் பணி அவசியமாவதை தொடர்ந்து, அவசர அவசியம் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் ஏற்கனவே பணி செய்த அதே ஒப்பந்ததாரர் முலம் அதே விலை விகித அடிப்படையில் ஜூலை 2021 மாதத்திற்கு ஈடுபடுத்திடவும் அதற்கான செலவினத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கும், பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் பணி உத்திரவு வழங்கியமைக்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.825 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள கீழ்காணும் வாகனங்களுக்கு 2021-22ம் நிதியாண்டிற்கு வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டி புதுப்பித்தல் பிரிமியத் தொகை செலுத்த கோரி தி நியு இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனத்திடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | இன்னோவா வாகன பதிவு எண். | காப்பீடு முடிவு தேதி | புதுப்பித்தல் பிரிமியத் தொகை |
|---|---|---|---|
| 1 | TN11 D 2013 | 2.7.2021 | ரூ.25536 |
| 2 | TN11 D 1289 | 2.7.2021 | ரூ.22880 |

**அலுவலக குறிப்பு:**

1. வாகனத்திற்கான புதுப்பித்தல் பிரிமியத் தொகை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று புதுப்பித்தல் பிரிமியத் தொகை செலுத்தியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.826 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சிக்கு 14வது நிதி குழு மான்யத் திட்டம் 2019-20 ஆண்டில் இரண்டு தவணைகளில் 50 % தொகை ரூ.147.95 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நகரில் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்த 15 எண்ணிக்கையிலான சாலைகளை தார் சாலைகளாக அமைக்க இந்நகர மன்ற தீர்மானம் எண்.591 நாள் 31.1.2020ல் ரூ.158.00 இலட்சத்தில் மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் செலவினம் தொகை ரூ.150.60 இலட்சத்திற்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. ஒதுக்கீடு தொகை போக மீதமுள்ள தொகையினை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மேற்கண்ட தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளதால், தற்போது புரேவி

புயல் தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.21976/2020/இ2 நாள் 5.3.2021ல் மான்யத் தொகையாக ரூ.1.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

எனவே, 14வது நிதி குழு மான்யத் திட்டத்தில் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து கூடுதல் செலவினமாக மேற்கொள்ளப்பட்ட தொகைக்கு ஈடுடாக புரேவி புயல் தடுப்பு நடவடிக்கைகாக வழங்கப்பட்ட தொகை ரூ.1.20 இலட்சத்தினை ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.827 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் படி முதல் நிலை சேகரிப்பு பணிகளை மேற்கொள்ள மூன்று சக்கர தள்ளு வண்டிகள் 30 எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வண்டிகள் 2014 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு தற்போது வரை பயன்படுத்தப்பட்டு வருகிறது. அவை தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது.

எனவே பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி புதிய வாகனங்கள் வாங்கி வழங்க இயலாத நிலையில் மேற்படி வாகனங்களை பழுது நீக்கம் செய்து தர ஆவண செய்யுமாறும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கும், பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இப்பணியினை மேற்கொள்ளவும், இப்பணியினை நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் ஒருவர் மூலம் மேற்கொள்ளவும், இதற்கான தோராய செலவின மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.828 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவ மழையினை எதிர்கொள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் கால்வாய்களை துார்வாரி தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இதன் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் துார் வார வேண்டிய முக்கிய கால்வாய்களின் பட்டியல் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் சமர்பித்துள்ளனர்.

மேற்படி மழைநீர் வடிகால்வாய்களை துார்வாரும் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அளவுகோலின் படி வெளிக்கொணர்வு முறையில் துாய்மை பணியாட்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.6.00

இலட்சத்திற்கும், அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இப்பணியினை மேற்கொள்ளவும், இப்பணியினை நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் ஒருவர் மூலம் மேற்கொள்ளவும், இதற்கான தோராய செலவின மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மான எண்.829 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் எண்.10

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் ஸ்டிக்கர், பேனர் மற்றும்இதர இதர நோட்டீஸ்கள் அச்சடித்து சப்ளை செய்த வகையில் எ.எஸ். டிஜிட்டல், தாம்பரம் வழங்கியது | 99700 |
| 2 | நகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டள்ள குளிரூட்டும் சாதனங்கள் பழுது நீக்கம் செய்தல் பணி மற்றும் இச்சாதனங்களுக்கு புதியதாக மின் சமன்படுத்தும் கருவிகள் சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு ஒப்பந்ததாரர் பிக் பாக்ஸ் இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு வழங்கியது | 40000 |
| 3 | நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனங்கள் TN11 AK6142 & TN11 D2013 பழுது நீக்கம் செய்தல் பணி மேற்கொண்டமைக்கு எம்.கே.எஸ். மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு வழங்கியது | 10150 |
| 4 | வார்டு எண்.9 மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி பகுதியில் சுற்றுசுவர், பேவர் பிளாக் மற்றும் வர்ணம் அடித்தல் பணி செய்தமைக்கு ஒப்பந்ததாரர் திருமதி. ஆர். சுஜாதா வழங்கியது. | 969612 |
| 5 | மகாலட்சுமி நகர் மற்றும் மாடம்பாக்கம் மெயின் ரோடு ஆகிய இரு இடங்களில் பிவிசி மெயின் பைப்லைன் அமைத்தல் பணி மேற்கொண்டமைக்கு ஒப்பந்ததாரர் திரு. எல். கிஷோர்குமார்க்கு வழங்கியது | 249516 |
| 6 | கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் முகவுறை, பிபிஈ கிட் மற்றும் கையுறை ஆகியன சப்ளை செய்த திரு. ஆர். சதீஷ்குமார், பாண்டிசேரி வழங்கியது | 421500 |
| 7 | கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் | 226800 |

| | | |
|---|---|---|
| | நகராட்சி பகுதியில் குடியிருப்பு தோறும் கணக்கெடுப்பு பணி செய்த 50 பணியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்கிய ஒப்பந்ததாரர் அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் நிறுவனத்திற்கு வழங்கியது. | |
| 8 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக மே 2021 மாதத்திற்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோ மைக் செட் மூலம் விளம்பரம் செய்தது வண்டி வாடகை, எரிபொருள், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராம்தாஸ் வழங்கியது | 111600 |
| 9 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக மே 2021 மாதத்திற்கு இரு எண்ணிக்கையிலான டாடா ஏஸி வாகனத்தில் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, உயர் அழுத்த மோட்டாருடன் கூடிய ஸ்பேரயர், வண்டி வாடகை, டீசல், இரண்டு நபர்களுக்கான நாள் ஊதியம், ஓட்டுநர் ஊதியம், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் நிறுவனத்திற்கு வழங்கியது. | 558000 |

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்.830 செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி